# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,204 — 1921 ௵ ஆவணி௴ 19 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### காணி விற்பனவுகள்.

**No. 933, N. P.**—1921 ம் ஆண்டு ஐப்பசி (ஒக்டோபர்)மாதம் 3 ந் திகதி, திங்கட்கிழமை காலமே 9 மணியளவில் தொண்டைமானாறு உப்புக்குதத்தில் வடமாகாணத்து கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது நீந்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும். 24 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சி மேற்குப் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 5,187. குறிச்சி—கெருடாவில். உரித்தாளி—முடிக்குரியது.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | எல்லைகூட்டினவரின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கடற்கரை .. | — .. | வெளிநிலம் (கடலுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 3 | 14 | —* |
| 2 | மலையில்காடு .. | வி. வடிவேலு .. | தென்னையும் பனையுமுள்ள தோட்டம் (கடலுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 3 | 37 | —* |
| 3 | ஷை .. | வி. வடிவேலு .. | தென்னையும் பனையுமுள்ள தோட்டம் | 1 | 1 | 36 | 250 |
| 4 | கரையான்காடு .. | கெ. சுந்தரம் .. | ஷை .. .. | 0 | 2 | 6 | 250 |
| 5 | ஷை .. | — .. | ஷை (ரோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 0 | 15 | —* |
| 6 | ஷை .. | தம்பையா இளையதம்பி | தென்னையும் பனையுமுள்ள தோட்டம் | 0 | 1 | 11 | 250 |
| 7 | ஷை .. | — .. | ஷை (ரோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 0 | 5 | —* |
| 8 | மலையில்காடு .. | — .. | (பாதைக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 0 | 10 | —* |
| 9 | ஷை அல்லது சூடு காட்டுப்புலம் | — .. | தென்னைத்தோட்டம் (கொடிஸ்தானம்) | 0 | 0 | 19 | —* |
| 10 | ஷை ஷை .. | கெ. சித்திரவேலு கைம்பெண் பொன்னம்மா | தென்னைத்தோட்டம் (கடலுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 2 | 1 | —* |
| 11 | ஷை ஷை .. | ஷை .. | தென்னைத்தோட்டம் .. | 2 | 3 | 5 | 250 |
| 12 | ஷை ஷை .. | ஷை .. | தோட்டம் (ரோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 0 | 14 | —* |
| 13 | அயில்நின்ற காடு .. | மாகாளி வள்ளி .. | தென்னைத்தோட்டம் (கடலுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 0 | 32 | —* |
| 14 | ஷை .. | ஷை .. | தென்னைத்தோட்டம் .. | 0 | 0 | 33 | 250 |
| 15 | மலையில்காடு .. | எஸ். வீரகத்தி .. | முட்பற்றையுள்ள நிலம் (கடலுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 0 | 5 | —* |
| 16 | ஷை .. | ஷை .. | முட்பற்றையுள்ள நிலம் .. | 0 | 0 | 20 | 50 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | எல்லைகூட்டினவரின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 17 | மலையில்காடு .. | — .. | பாதை (சுடலைக்குப்போகும் பாதைக்குச் சேமிக்கப்பட்டது) | 0 | 0 | 29 | —* |
| 18 | மலையில் காடு அல்லது சுடு காட்டுப்புலம் | எஸ். வீரகத்தி அல்லது கே. சித்திரவேலு கைம்பெண் பொன்னம்மா | முட்பற்றையும் சில பனைகளுமுள்ள நிலம் | 0 | 1 | 6 | 50 |
| 19 | ஷை .. | ஷை .. | பனைகள் (ரோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 0 | 3 | —* |
| 20 | பெரியகாட்டுப்புலம் .. | எஸ். வீரகத்தி .. | பனைகள் .. .. | 0 | 3 | 6 | 50 |
| 21 | ஷை .. | ஷை .. | பனைகள் (ரோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. | 0 | 0 | 8 | —* |
| 22 | ஷை .. | — .. | பாதை (சுடுகாட்டுக்குப்போகும் பாதைக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 0 | 13 | —* |
| 23 | கடற்கரை .. | — .. | வெளிநிலம் (கடலுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 | 0 | 35 | —* |
| 25 | மலையில்காடு .. | கே. சித்திரவேலு கைம்பெண் பொன்னம்மா | தென்னந்தோட்டம் (ரோட்டுக்குச் சேமிககப்பட்ட நிலம்) | 0 | 0 | 24 | —* |

*விற்பனவுக்கல்ல.

இக்காணிகளைப்பற்றிய மறுவிபரங்களை வடமாகாண அரசாட்சி ஏசன்றுத்துரை யிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகந்தோர்த் தலைவரிடத்திலும் எழுதி அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1921 ௵ ஆவணி௴ 17 ௳

கிறேயம் தொம்ஸன்,
கலோனியல் சக்கிறுத்தார்.

---

**No. 934, N. P.**—1921 ௵ ஆண்டு ஐப்பசி (ஒக்டோபர்) மாதம் 4 ௳ திகதி, செவ்வாய்க்கிழமை காலமே 9 மணியளவில் தொண்டைமானாறு உப்புக்குதத்தில் வடமாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்களை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கபடும் அல்லது தீந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும். 18 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சி மேற்குப்பகுதியி லிருக்கின்றது.

பிளான் இலக்கம் 5,187. குறிச்சி—கெருடாவில். உரித்தாளியின் பெயர்—முடிக்குரியது.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | காணிகூட்டினவரின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 26 | ஐயங்கன் காடு .. | — .. | முள்ளுங்கல்லுமுள்ள நிலம் (ரோட்டுக்குச் சேமிக்கப்பட்டது) | 0 | 0 | 27 | —* |
| 27 | ஷை .. | எஸ். சின்னத்துரை .. | முள்ளுங்கல்லுமுள்ள நிலம் .. | 3 | 1 | 10 | 16 |
| 28 | நுகனுக்கு மேற்கு .. | என். வேலுப்பிள்ளை .. | ஷை .. | 3 | 2 | 12 | 16 |
| 29 | மண்டபக்காடு அல்லது சிராணன்தனை | கெ. இராசலிங்கமும் அம்மினி கந்தையாவும் | வடலிகள் (பகுதி) .. | 7 | 3 | 28 | 16 |
| 30 | தன்னை .. | எஸ். பெரியதம்பி .. | கலடு .. .. | 1 | 2 | 23 | 16 |
| 31 | ஷை .. | எஸ். வீரகத்தி .. | கலடு .. .. | 1 | 2 | 38 | 16 |
| 22 | நீலாந்தனை .. | கெ. மயிலு .. | கலடு (ஒரு பனை) .. | 2 | 0 | 3 | 16 |
| 33 | நுகனுக்குத் தெற்கு .. | கெ. வீரகத்தி .. | வெளிநிலம் .. | 3 | 0 | 32 | 16 |
| 34 | ஷை .. | — .. | ஒழுங்கை அல்லது பாதை (பாதைக்குச் சேமிக்கப்பட்டது) | 0 | 0 | 30 | —* |
| 35 | தையகப்புலத்திற்குத் தெற்கு | கெ. சின்னத்தம்பி பெண் மாணிக்கமும் கே. தம்பனும் வி. முருகுப்பிள்ளையும் | குடியிருக்கும் நிலம் (ஓர் சிறு வீடுமுளது) | 2 | 3 | 7 | 16 |
| 36 | ஷை .. | எஸ். வீரகத்தி .. | வெளிநிலம் (இருபனைகள்) .. | 0 | 0 | 19 | 16 |
| 37 | ஷை .. | எம். சின்னத்தம்பி பெண் பாறுவதி | தோட்டம் .. .. | 2 | 3 | 38 | 16 |
| 38 | ஷை .. | கெ. தம்பு .. | பற்றைகளுள்ள வெளிநிலம் .. | 2 | 2 | 12 | 16 |
| 39 | பிடாரந்தனை .. | வி. சிதம்பரப்பிள்ளை .. | வெளிநிலம் (காடு) .. | 2 | 1 | 3 | 16 |
| 40 | பிடாரந்தனைக்குத் தெற்குப் பிடாரந்தனை | எம். பெரியதம்பி .. | பனந்தோட்டம் .. | 2 | 2 | 0 | 16 |
| 41 | கோணுவளை .. | — .. | பாதைக்குச் சேமிக்கப்பட்ட நிலம் | 0 | 0 | 34 | —* |
| 42 | ஷை .. | எஸ். சிவகுரு .. | காடு (வெளிநிலம்) .. | 1 | 3 | 7 | 16 |
| 43 | ஷை .. | — .. | வண்டிற்பாதைக்குச் சேமிக்கப்பட்ட நிலம் | 0 | 0 | 8 | —* |

* விற்பனவுக்கல்ல.

இக்காணிகளைப்பற்றிய மறுவிபரங்களை வடமாகாண அரசாட்சி ஏசன்றுத்துரையிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகந்தோர்த் தலைவரிடத்திலும் எழுதி அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1921 ௵ ஆவணி௴ 17 ௳

கிறேயம் தொம்ஸன்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கும்பவொலுவாவில் ஒரு குழந்தைப்பிள்ளை பாடசாலைகட்டுகிற என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 17,596. குறிச்சி—கும்பலொலுவா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | டெல்ககவத்த .. | சேனை .. | எச். சறடியஸும் மற்றவாகளும் .. | 0 | 2 | 21·3 |
| 2 | ஷை .. | சேனை .. | எல். புஞ்சி சின்னேவும் பெம்பியும் .. | 0 | 0 | 21·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ௵ செப்டம்பர் மாசம் 12 ந் தேதியிலன்று 12 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1921 ம் ௵ ஆகஸ்ட்டுமீ 15 ௳.

ஜே. ஜீ. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அறறிக்கல என்னும் இடத்தில் ஓர் சவக்காலைக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 17,599. குறிச்சி—அற்றிக்கல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | எககொடவத்தை .. | றப்பர் மரமுள்ள தோட்டம் .. | பி. எம். சுவத்தான் அப்புவும் மற்றவர்களும் | 0 | 3 | 22·2 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 2 | 5·5 |
| 3 | றப்பாகட்டுவ .. | சிறு காடு .. | ஷை .. | 0 | 0 | 14·9 |

எடுத்துக் கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ௵ புரட்டாதி மாசம் 12 ந் தேதியிலன்று காலை 12 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1921 ம் ௵ ஆவணிமீ 16 ௳.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கராக்கமவிலிருந்து தலாத்து ஓயாவுக்குப் போகும் குறுக்குரோட்டில் சுரங்கம் வெட்டுதற்கு என்னும் (பகிரங்கதேவைக்கு) வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 7,183. குறிச்சி—குருதேனியா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | குனிகலகேன அல்லது அமுனகாவவத்தை | தென்னந்தோட்டம் | பீறுவாடா கினியா .. .. | 0 | 1 | 12 |
| 2 | கூனிகலகேன .. | ஷை .. | சி. ஜே. டெனிசும் உடன்கூடிய இன்னொருவரும் | 0 | 0 | 15·1 |
| 3 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 2 | 2·4 |

எடுத்துக் கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஞூ செப்டம்பர்மாசம் 22 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1921 ம் ஆண்டு ஆகஸ்ட்மீ 11 ந் உ.

ரீ. ஜீ. விலற்,
மத்தியமாகாண உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் முன்மாதிரி வீடுகள் கட்டுதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 7,202. குறிச்சி—கண்டி நகரசங்க எல்லைகட்குள்.

| துண்டுகள். | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | ஆண்டியாகொத்துவவத்தை | ஊர்த்தோட்டமும், கட்டிடங்களும், வெறுநிலமும் மறுவும் | ஏ. ஆர். காசிலெவ்வை | 7 0 2·92 |
| 2 | ஷை | ஷை | ஷை | 0 0 9·66 |
| 3 | ஷை | ஷை | ஷை | 0 0 18·81 |
| 4 | ஷை | ஷை | ஷை | 0 0 18·50 |
| 5 | ஷை | ஷை | கண்டி நகரசங்கத்தார் | 0 0 29·06 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஞூ செப்டெம்பர் மாதம் 26 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1921 ம் ஞூ ஆகஸ்டுமீ 9 ந் உ.

ரீ. ஜீ. விலற்,
மத்தியமாகாண உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வெலிமடையில் ஒரு பொது கக்கூசு கட்டுதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பயினல் விலக் படத்து இல. 58. குறிச்சி—ஆகம்பொடிகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 2J | வெலிமடயத்த | வெறுநிலம் | டீ. தி. ஜே. எவ். டையஸ் | 0 0 2·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஞூ புரட்டாதி மாசம் 9 ந் திகதியிலன்று 1 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1921 ம் ஆண்டு ஆவணிமீ 10 ந் உ.

ஆர். என். தேன்,
ஊவா அரசாட்சி ஏசண்டு.

## உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

---

[அறிவித்தல் இல. 7,934, கண்டி.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண்நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தை யுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானுல், அவர்கள் 1921 ம் ஹு (ஒகஸ்ற்) ஆவணி மாதம் 19 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கண்டி மத்திய மாகாணத்து கண்டி டிஸ்றிரிக் கச்சேரியில் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு அல்லது எழுத்து மூலத்தில் சொல்லப்பட்ட காணி ஒன்று அல்லது பலதுக்கு அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லிய சட்டங்களினுல் கொடுக்கப்பட்ருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி அல்லது காணிகள் முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ரீ. ஜி. வில்லெற்,
உதவி அரசாட்சி ஏசென்று.

குறிப்பு.—இங்கு சொல்லிய நிலத்திலே யல்லது நிலங்களில் வழிப்பாதை யுரித்து உண்டானுல் நிலங்களில் உடந்தையுள்ளதாக எண்ணப்படும்.

சொல்லப்பட்ட காணியின் விவரம்.

இங்கு அணைக்கப்பட்ட படத்தில்* விபரித்தபடி மத்திய மாகாண கண்டி டிஸ்றிரிக்கில் யற்றிநுவரப்பலாத்தையில் கங்காவத்த கோறளையில் போவல கிராமத்தில் இருக்கும் பின்வரும் காணித்துண்டு :—

பிரதம படம் 6,840.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 3 .. | பெற்றிகேதென .. .. .. .. | 3 0 9·4 |

அவற்றின் எல்லைகளாவன: வடக்கே-அரசாட்சியால் உரித்துப்பேசப்பட்ட டங்கொலதோட்டத்தாலும் (பிரதம படம் 6,840 ல் காணித்துண்டு 2), கடுகன்னுவவிலிருக்கும் ஆதர் டி சொயிசாவால் உரித்துப்பேசப்பட்ட டங்கொலதோட்டத்தாலும்; கிழக்கே-போவலயிலிருக்கும் பி. இ. எஸ். பெரேராவாலும் மாஒய தோட்டத்துக் கண்டாக்கு பேர்னுண்டோவாலும், கட்டுக்கலையிலிருக்கும் பொலிஸ் சார்சென்ற் அப்டுல் கமித் அடுகின்மீதின்னுலும் உரித்துப்பேசப்பட்ட டங்கொலகெனயாலும் (பிரதமபடம் 6,840 ல் காணித்துண்டு 6); தெற்கே-97,263 ம் உரித்துப்படத்தில் காட்டியிருக்கிற காணியாலும், ஜலின் ஆராச்சியின் பாத்தியஸ்தரால் உரித்துப்பேசப்பட்ட டங்கொலதோட்டத்தாலும் (உரித்துப்படம் 85,428), அரசாட்சியால் உரித்துப்பேசப்பட்ட டங்கொலதோட்டத்தாலும் (பிரதமபடம் 6,840 ல் காணித்துண்டு 4); மேற்கே-அரசாட்சியால் உரித்துப்பேசப்பட்ட டங்கொலதோட்டமும் (பிரதமபடம் 6,840 ல் காணித்துண்டு 1).

*இங்கிலீசின் மூன்ரும் பாகம் 1112 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 7,935, அம்பாந்தோட்டை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள் 1921 ம் ஹு (ஆகஸ்டு) ஆவணிமீ 19 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம, 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் பிறட்றிக் லூயிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருககும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிககுரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

பிறட்றிக் லூயிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—இக்காணிக ளெவற்றிலேனு முள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்கைச்சேர்ந்த மேற்குக் கிறுவாப்பத்தில் வறக்காக்கொடக் கிராமத்திலிருக்கு மித்துட னணைக்கப்படும் படப்பிரதிகளில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள் :—

I.—இலங்கை யளவைப் பிரதமபடம் 267.

| காணித்துண்டு | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 5F1 .. | கன்சபாவப் பாதை .. .. .. .. | 0 0 12 |
| 5G1 .. | ஷை .. .. .. .. | 0 0 4 |
| | | 0 0 16 |

*இங்கிலீசின் மூன்ரும் பாகம் 1112—1113 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

எல்லைகளாவன : வடக்கு-பாணிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்படவிருக்கும் மியல்லவிலிருந்து மோதரவானவுக்குப் போகும் கன்சபாவப்பாதை ; கிழக்கு-ஒபடயாயேவத்த (கிராமத்தாற்குரியது) ; தெற்கு-வடுமுல்லேஅத்மக (கிராமத்தாற்குரியது) ; மேற்கு-பாணிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்படவிருக்கும் கன்சபாவப் பாதை, வடுமுல்லேஅத்மக (கிராமத்தாற்குரியது), ஒபடயாயேவத்த (கிராமத்தாற்குரியது).

II.—இலங்கை யளவைப் பிரதமபடம் 267.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 5ஈ2 .. | கன்சபாவப் பாதை .. .. .. .. | 0 0 2 |

எல்லைகளாவன : வடக்கு-பாணிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்படவிருக்கும் மியெல்லவிலிருந்து மோதரவானவுக்குப் போகும் கன்சபாவப்பாதை ; கிழக்கு-ஒபடயாயேவத்த (கிராமத்தாற்குரியது); தெற்கு-பாணிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்படவிருக்கும் கன்சபாவப்பாதை ; மேற்கு-மகாப்பெலவத்த (கிராமத்தாற்குரியது).

[அம்பாந்தோட்டை வி. உ. 15—1921.]

---

## 1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க மதுபானத்தீர்வைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

மாத்தளைக் கள்ளுக்குத்தகை அறிவித்தல் 1921—22.

இத்தால் அறியத்தருவது என்னவெனில் :—இதன்பின்னுல் வரும் கள்ளுக்குத்தகையை 1921 ம் ஆண்டு ஒக்ரோபர் மாசம் 1 ந் திகதி முதல் 1922 ம் ஆண்டு செப்ரெம்பர் மாசம் 30 ந் தேதிவரையுமாகிய பன்னிரண்டு மாசககாலத்துக்கும் விலைக்குக் கொள்வனவு பண்ணுவதற்கான நிமித்தமாக மாத்தளைக் கச்சேரியில் ஆகஸ்ட் மாசம் 30 ந் திகதி செவ்வாய்க்கிழமையிலன்று பின்னேரம் ஒன்றரை மணிக்கு உதவி அரசாட்சி ஏச்சன்ற் அவர்களால் வெந்தீசில் விற்கப்படும்.

மேலதிகம் ஏதும் சங்கதி வேண்டுமாகில் அவ்வூர் உதவி அரசாட்சி ஏச்சன்றிடம் அல்லது அவ்வூர் றட்டேமகாத்மையாவிடம் அறிந்துகொள்ளலாம்.

மாத்தளைக் கச்சேரி,
1921 ம் ஹூ ஆகஸ்ட்மீ 8 ந உ.

சி. கரிசன்யோன்ஸ்,
உதவி அரசாட்சி ஏச்சன்ற்.

---

## தொழிலுக்குட்படாதவரின் அறிவித்தல்.

களுத்துறைப்பகுதியில், பாணத்துறைத் தொத்தமுனையில், பாணத்துறைபத்தாவில், வலானு என்னுமிடத்தில் வசிக்கும் டொன் பார்ன்ஸ் கருணாரட்ணவாகிய நான் மூன்று மாதத்துக்குப்பின் களுத்துறைப்பகுதியில் நொத்தாரிசுவாக நியமனம்பெற்றுச் சிங்களப்பாஷையில் வேலைபார்க்க விண்ணப்பமொன்று பதிவுகாரியகர்த்தருக்குச் செய்யவெண்ணியிருக்கிறேனென்பதை இத்தால் பிரசித்தப்படுத்துகிறேன்.

பாணத்துறை வலானு,
1921 ம் ஹூ யூன்மீ 7 ந உ.

டி. பீ. எவ். கருணாரட்ண.

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.